# ஊடக வெளியீடு

## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2024 (2025)

## அழகியல் பாட செய்முறைப் பரீட்சை

மேற்படி பரீட்சையின் செய்முறைப் பரீட்சை 2025.05.21 ஆம் திகதியிலிருந்து 2025.05.31 ஆம் திகதி வரை 171100 பரீட்சார்த்திகளுக்காக 1228 பரீட்சகர் குழுக்கள் நாடு பூராகவும் செயற்படும்.

**41 - சங்கீத (மேலைத்தேய) பாடத்தின் கேட்டற் பரீட்சை 2025.05.25 ஆம் திகதி உரிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.**

| | |
|---|---|
| **40 - சங்கீதம் (கீழைத்தேய)** | **45 - நடனம் (பரதம்)** |
| **41 - சங்கீதம் (மேலைத்தேய)** | **50 - நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)** |
| **42 - கர்நாடக சங்கீதம்** | **51 - நாடகமும் அரங்கியலும் (தமிழ்)** |
| **44 - நடனம் (சுதேச)** | **52 - நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)** |

02. மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களில் இறுதிப் பெறுபேற்றைத் தீர்மானிப்பதற்காக எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளின் புள்ளிகளும் பயன்படுத்தப்படுமாதலால் அவ்விரு பகுதிகளுக்கும் தோற்றுதல் கட்டாயமானதாகும். செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளுக்கு அப் பாடத்திற்கான பெறுபேறு வழங்கப்படமாட்டாது.

03. பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதியட்டைகளும் நேர அட்டவணையையும் குறித்த பாடசாலை அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதியட்டைகள் அவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

04. பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் கிடைக்கப்பெற்ற அனுமதியட்டைகளில் குறிப்பிட்டுள்ள பாடம், மொழிமூலம் என்பவற்றில் திருத்தங்கள் இருப்பின் உடனடியாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளைக்கு அவற்றை சமர்ப்பித்து அத்திருத்தங்களை செய்து கொள்ள முடியும்.

05. அனுமதியட்டைகள் கிடைக்கப்பெறாத அதிபர்கள் தமது பாடசாலை எண், பாடசாலையின் பெயர், முகவரி மற்றும் உரிய விவரங்களுடனும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பெயர், முகவரி, பரீட்சைச் சுட்டெண், அழகியல் பாடம் முதலிய விவரங்களுடனும் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி எண்களூடாக அறியத்தருவதுடன் பாடசாலை அதிபர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இது தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்த வேண்டுமென்பதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலும் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திற்குள் **www.doenets.lk** நுழைந்து பரீட்சை சுட்டெண்ணை உள்ளிடுவதன் மூலம் 2025.05.19 ஆம் திகதி முதல் அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

| | |
|---|---|
| **தொலைபேசி இலக்கம்** | **- 011-2784208, 011-2784537, 011-2786616, 011-2786200, 011-2784201** |
| **மின்னஞ்சல் முகவரி** | **- gceolexamsl@gmail.com** |
| **நேரடி தொலைபேசி இலக்கம்** | **- 1911** |
| **தொலைநகல் இலக்கம்** | **- 011-2784422** |

**ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**